بسم اللہ الرحمن الرحیم　　نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم　　وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدۡ نَصَرَكُمُ ٱللَّهُ بِبَدۡرٖ وَأَنتُمۡ أَذِلَّةٞ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 6

இதழ் 21

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

13 ஷவ்வால் 1442 ஹிஜ்ரி கமரி 27 ஹிஜ்ரத் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 27 மே 2021


## அல்லாஹ்வின் கட்டளை

يَٰٓأَهۡلَ ٱلۡكِتَٰبِ قَدۡ جَآءَكُمۡ رَسُولُنَا يُبَيِّنُ لَكُمۡ كَثِيرٗا مِّمَّا كُنتُمۡ تُخۡفُونَ مِنَ ٱلۡكِتَٰبِ وَيَعۡفُواْ عَن كَثِيرٖۚ قَدۡ جَآءَكُم مِّنَ ٱللَّهِ نُورٞ وَكِتَٰبٞ مُّبِينٞ

வேதத்தையுடையவர்களே! நம்முடைய தூதர் உங்களிடம் வந்து விட்டார். வேதத்திலிருந்து நீங்கள் மறைத்தவற்றுள் பெரும்பாலானவற்றை அவர் உங்களுக்கு விளக்குகின்றார். பெரும்பாலான குற்றங்களையும் மன்னிக்கிறார். நிச்சயமாக உங்களுக்கு அல்லாஹ்விடமிருந்து ஓர் ஒளியும், மிகத் தெளிவான ஒரு வேதமும் வந்துள்ளன. (5:16)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**நாம் அடைந்த மற்றும் கண்ட இறைவனைப் பற்றி மக்களுக்கு அறிவித்துக் கொடுக்க வேண்டும் என்பதே எமது ஆசையாகும். மேலும் மனிதன் விரைவாக இறை அடியானாக ஆகிவிடும் எளிய வழியை மக்களுக்கு கூற வேண்டும் என்பதும் எமது விருப்பமாகும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### இறை சன்னிதானத்தில் நெருக்கத்தைப் பெற்ற அடியார்களின் அந்தஸ்து

தனது அடியார் இழிவுபடுத்தப்பட்டு நசுக்கப்படுவதை இறைவனின் தன்மானம் ஒருபோதும் விரும்புவதில்லை என்பதை நினைவிற் கொள்ளுங்கள். இன்னும் கூறப்போனால் இறைவன் சுயம் தனித்தவனாகவும், இணையற்றவனாகவும் இருப்பதைப் போன்று தனது அடியாரையும் தனித்தவனாகவும், இணையற்றவனாகவும் ஆக்கி விடுகின்றான். உலக அரங்கில் இறை அடியாருடன் எந்த மனிதனாலும் போட்டி போட முடியாது. எல்லா புறமிருந்தும் அவர் மீது தாக்குதல்கள் செய்யப்படுகின்றன. தாக்குதல் தொடுக்கும் ஒவ்வொரு நபரும் இறைவனின் ஆற்றலை அறியாமல் நான் அவரை அழித்து விடுவேன் என்று கருதுகின்றான். (ஆனால்) அந்த அடியார் தப்பித்து விடுவது மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட வேவொரு சக்தியினால் ஆகும் என்பதை அவன் இறுதியில் அறிந்து கொள்கின்றான். ஏனென்றால் அவனுக்கு முன்னரே அது தெரிந்திருந்தால் அவன் தாக்குதல் நடத்தியிருக்க மாட்டான்.

எனவே இறைவனின் சன்னிதானத்தில் ஒரு நெருக்கத்தைப் பெற்ற மக்கள் உலகில் இறை இருப்பிற்கான ஓர் அடையாளமாக இருக்கின்றார்கள். வெளிப்படையில் இந்த வகையில் நிலைமை அமைகின்றது. அதாவது ஒவ்வோரு எதிரியும் தம்முடன் போட்டியிட்டு இவர் தப்பிக்க முடியாது என்று கருதுகின்றான். ஏனென்றால் எல்லா வகையான திட்டங்களும் முயற்சிகளின் விளைவுகளும் அவனை இந்த நிலைக்கு கொண்டு வந்து சேர்த்து விடுகின்றன. ஆனால் அந்த இறை அடியார் இந்தத் தாக்குதல்களிலிருந்து ஒரு கண்ணியத்துடனும், மரியாதையுடனும், அமைதியுடனும் தப்பித்து வெளியேறி விடும்பொழுது ஒரு நொடிப்பொழுதில் எதிரிக்கு ஆச்சரியத்திற்குள்ளாக நேரிடுகிறது. மனித ஆற்றலுக்குட்பட்ட விஷயமாக இருந்திருந்தால் இவர் தப்பித்திருக்கவே முடியாது. ஆனால் இவரோ மிகவும் பாதுகாப்புடன் இருக்கின்றார். எனவே இது மனிதனின் பணியல்ல. மாறாக இறைவனின் பணியாகும் என்பதைப் எண்ணி அவன் ஆச்சரியம் அடைகின்றான்.

இறை சன்னிதானத்தில் நெருக்கம் பெற்றவர்களின் மீது தாக்குதல்கள் நடக்கின்றன. அவை ஏன் நடக்கின்றன? என்பது இதிலிருந்து தெரிய வருகின்றது. இறைஞானம் மற்றும் நுட்பத்தை அறியாத மக்கள் இதுபோன்ற எதிர்ப்புகளை ஓர் இழிவாக கருதுகின்றனர். ஆனால் இந்த இழிவில் அந்த இறை அடியாருக்கு கண்ணியமும், தனித்தன்மையும் வெளிப்படுவதை அவர்கள் அறிவதில்லை. அவர்கள் இறைவனின் இருப்பிற்கு ஓர் அடையாளமாக இருக்கின்றார்கள். எனவே அவர்களின் இருப்பு ஆயத்துல்லாஹ் (இறை அடையாளங்கள்) என்று அழைக்கப்படுகின்றது.

நாம் பெற்ற மற்றும் கண்ட இறைவனைப் பற்றி மக்களுக்கு அறிவித்துக் கொடுக்க வேண்டும் என்பதே எமது ஆசையாகும். மேலும் மனிதன் விரைவாக இறை அடியானாக ஆகக்கூடிய எளிய வழியை மக்களுக்கு கூற வேண்டும் என்பதும் எமது விருப்பமாகும். எனவே கதைகள் மற்றும் கற்பனைகள் மூலமாக எவரும் இறைஞானத்திலும் நுட்பத்திலும் முன்னேற்றம் பெற முடியாது. செயல் நிலையால் மனிதன் பார்க்காத வரை மனிதனால் முன்னேற முடியாது. எமது வழியைத் தவிர்த்து வேறு எந்த வழியிலும் மனிதனுக்கு அது கிடைப்பதில்லை. இந்த வழியை அடைவதற்கு பெரும் துன்பங்கள் மற்றும் கஷ்டங்களுக்கு அவசியமில்லை. இறைவனின் பார்வை உள்ளத்தின் மீது விழுகின்றது. எந்த உள்ளத்தில் அன்பும், நேசமும் இருக்குமோ அதற்கு சிலைகளுக்கு என்ன அவசியம் இருக்க முடியும்? சிலை வணக்கத்தின் மூலம் மனிதன் ஒருபோதும் சரியான உறுதியான முடிவுகளை அடைய முடியாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 292 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

இளைஞர்கள் சீர்திருந்தாதவரை சமுதாயங்கள் சீர்திருந்தாது.
(ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க இரண்டாவது கலீஃபா ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளின் நற்குறிப்புகள்

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 23 ஏப்ரல் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **23 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

இன்று நான் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைப்பேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பனூ அதீ பின் கஃஅப் பின் லுயீஸே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அன்னாரின் தந்தையார் பெயர் கத்தாப் பின் நுஃபைல் ஆகும். மற்றோர் அறிவிப்புக்கு ஏற்ப அன்னாரின் தாயார் பெயர் ஹன்தமா பின்த் ஹாஷிம். இவ்வாறே அன்னாரின் தாயார் அபூஜஹ்லுடைய சிறிய தந்தைவழி சகோதரி ஆவார்கள். மற்றொரு அறிவிப்புக்கு ஏற்ப தாயார் பெயர் ஹன்த்தமா பின்த் ஹிஷ்ஷாம் ஆகும். இவ்வாறு அவர்கள் அபூஜஹ்லுடைய சகோதரியாகிறார்கள். ஆனால் இந்த சகோதரி எனும் அறிவிப்பு அதிகம் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

அபூ உமர் (ரலி) கூறுகிறார்கள்: அபூஜஹ்லின் சகோதரியாக இருந்தார்கள் என்று யார் சொல்கிறாரோ அவர் தவறிழைக்கிறார். இப்படியிருந்திருந்தால் அபூஜஹ்ல் மற்றும் ஹாரிஸ் ஆகியோரின் சகோதரியாக இருந்திருப்பார்கள். ஆனால் உண்மையில், இவ்வாறு இல்லை. இவர்கள் அவர்கள் இருவரின் சிறிய தந்தையின் மகளாவார்கள். இவர்களின் தந்தையார் பெயர் ஹாஷிம் ஆகும்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 484 உமர் பின் கத்தாப் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பிறந்த தேதி குறித்து பல்வேறு அறிவிப்புகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கேற்ப ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பிறந்த வருடம் வெவ்வேறாக அமைகிறது. ஆக ஒரு கருத்து என்னவென்றால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பெரும் ஃபுஜ்ஜார் போருக்கு 4 வருடங்களுக்கு முன்பு பிறந்தார்கள். ஆனால் பிறிதோர் இடத்திலோ பெரும் ஃபுஜ்ஜார் போருக்கு 4 வருடங்களுடக்கு பின்னர் பிறந்தார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

இந்தப் போர் கண்ணியத்திற்குரிய (அதாவது போர் தடை செய்யப்பட்ட) மாதத்தில் நடைபெற்றதாலும், மேலும் இது மிகவும் தீய விஷயம் என்பதாலும், இது ஃபுஜ்ஜார் போர் என்று அழைக்கப்படுகிறது. இந்தப் போர் நான்கு கட்டமாக நடைபெற்றது.

நான்காவது போர் அல்ஃபுஜ்ஜாருல் அஃஸம் அதாவது பெரும் ஃபுஜ்ஜார் போர் என்று மட்டுமல்லாமல், அல்ஃபுஜ்ஜாருல் அஃஸமில் உக்ரா அதாவது கடைசி பெரும் போர் என்றும் கூறப்படுகிறது.

இது குரைஷ் பனுகனானா மற்றும் ஹவாஸன் ஆகிய கோத்திரங்களுக்கு இடையில் நடந்தது. இன்னொரு கருத்து என்னவென்றால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆமுல் ஃபீல் (அதாவது யானைப் போர் நடந்த) வருடத்திற்கு 13 ஆண்டுகளுக்குப் பிறகு மக்காவில் பிறந்தார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 484 உமர் பின் கத்தாப் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆமுல் ஃபீல் கி.பி 570 ஆம் ஆண்டாகும். அதற்கு 13 வருடத்திற்கு பிறகு எனும் கணக்குப்படி, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பிறந்த வருடம் கி.பி 583 ஆகிறது.

மூன்றாம் கருத்து என்னவென்றால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நுபுவ்வத்தின் ஆறாம் ஆண்டு இஸ்லாத்தை ஏற்றார்கள். அப்பொழுது அன்னாருக்கு வயது 26.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 204 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

கி.பி வருடத்திற்கு ஏற்ப நுவுவ்வத்தின் ஆறாம் ஆண்டு கி.பி 616 ஆகிறது. அப்பொழுது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் 26 வயதுடையவர்களாக இருந்தார்கள் என்றால், அவர்கள் பிறந்த வருடம் கி.பி 590 ஆகிறது.

4 வது கருத்து என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்களுக்கு 21 வயது இருக்கும்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பிறந்தார்கள்.

(தாரீகுல் ஹமீஸ்..... தொகுதி 1 பக்கம் 259 பைரூத்தில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும், இவை பல்வேறு கருத்துகளாகும். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபோது அன்னாருக்கு ஏறத்தாழ 21–லிருந்து 26க்கு இடைப்பட்ட வயது இருந்தது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் புனைப்பெயர் அபூ ஹஃபஸ் ஆகும்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 484 உமர் பின் கத்தாப் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போர் நாளன்று தமது சஹாபியிடம் இவ்வாறு கூறினார்கள்:

ஹாஷிம் கோத்திரத்தினரும் வேறு சில மக்களும் கட்டாயத்தினால் குரைஷியர்களோடு வந்துள்ளனர். அவர்கள் நம்மோடு சண்டையிட விரும்பவில்லை என்று எனக்குத் தெரிய வந்துள்ளது. ஆக உங்களில் எவராவது ஹாஷிம் கோத்திரத்தைச் சேர்ந்த நபரை சந்தித்தால் அவரைக் கொல்ல வேண்டாம். மேலும் எவர் அபுல் பக்தரியை சந்திக்கிறாரோ அவர் அவரைக் கொல்ல வேண்டாம். எவர் அப்பாஸ் பின் அப்தில் முத்தலிபை (இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தை ஆவார்கள்) சந்திப்பாரோ அவர் அவரையும் கொல்ல வேண்டாம். ஏனென்றால் இந்த மக்கள் கட்டாயத்தினால் குரைஷியர்களுடன் வந்துள்ளனர்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நாங்கள் எங்கள் தந்தைமார்கள், மகன்கள், சகோதரர்கள் மற்றும் உறவினர்களை கொல்ல வேண்டும். அப்பாஸை விட்டு விட வேண்டுமா? அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அவரை

அதாவது, அப்பாஸை சந்தித்தால், வாளால் நிச்சயம் அவரைக் கொன்று விடுவேன் என்று ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபா பின் உத்பா கூறினார்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: இந்த செய்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அடைந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பார்த்து, அபூ ஹஃப்ஸே! என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை அபூ ஹஃபஸ் என்ற புனைப் பெயரை வைத்து அழைத்தது இதுவே முதல் நாளாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் தூதரின் சிறிய தந்தையின் முகத்தில் வாள் வீசப்படுமா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இப்படி சொன்னவருடைய தலையை வாளால் சீவிட எனக்கு அனுமதி தாருங்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர் அதாவது அபூஹுஸைஃபா நயவஞ்சகத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த நாள் நான் சொன்ன அந்த சொல்லின் காரணமாக நான் நிம்மதியாக இருக்கவில்லை. நான் ஷஹீதாகக்கூடிய விஷயம் எனது இந்தக் கூற்றுக்கு பரிகாரமாக அமைவதைத் தவிர வேறு வழியில்லையே என்று எப்பொழுதும் அஞ்சிக் கொண்டே இருந்தேன் என்று பிற்காலத்தில் ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபா கூறி வந்தார்கள். ஆக ஹஸ்ரத் அபூஹுஸைஃபா (ரலி) அவர்கள் யமாமா போர் அன்று ஷஹீதாகி விட்டார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 429 கஸ்வா பத்ர் – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஃபாரூக் என்ற பட்டத்தை வழங்கினார்கள். இந்த பட்டத்தின் பின்னணி என்னவாக இருந்தது? இது தொடர்பாக அறிவிப்பு கிடைக்கிறது.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். உங்களுக்கு ஃபாரூக் எனும் பட்டம் எவ்வாறு வழங்கப்பட்டது? என்று நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கேட்டேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) எனக்கு 3 நாட்களுக்கு முன்பு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். நான் தற்செயலாக மஸ்ஜித் ஹராமை நோக்கி சென்றபோது அபூஜஹ்ல் வேகமாக, ஏசியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றான். பிறகு அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் செய்த அனைத்தையும் எடுத்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்கு தகவல் கிடைத்தபோது, அவர்கள் தமது வாளை எடுத்துக் கொண்டு கஅபா ஆலயத்தை நோக்கி புறப்பட்டார்கள். குரைஷியர்களின் அந்த வட்டத்தில், எங்கு அபூஜஹ்ல் அமர்ந்திருந்தானோ அங்கு அவனுக்கு முன்னால், தமது வில் தாங்கலாக நின்று கொண்டார்கள்.

மேலும் அவனைத் தொடர்ந்து முறைத்துப் பார்த்தார்கள். அபூஜஹில் அன்னாரின் முகத்திலிருந்து கோபத்தை உணர்ந்தான். அப்போது அவன் கேட்டான்: அபூ அம்மாராவே! (இது ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் புனைப்பெயர்) அபூ அம்மாராவே! என்ன விஷயம்? இதைக் கேட்ட உடனேயே ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் வேகமாக தமது வில்லை அவனது கன்னத்தில் அடித்ததார்கள். அது வெட்டுப்பட்டு அதிலிருந்து ரத்தம் வழிந்தோட ஆரம்பித்து விட்டது. அன்னாரின் கோபத்தின் அச்சத்தின் காரணமாக குரைஷியர்கள் விரைவாக சண்டையை முடித்து வைத்து விட்டார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்கள்: இவ்வாறு நிகழ்ந்தது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை எடுத்துரைத்தார்கள். அதை நான் பார்க்கவில்லை.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அந்த சம்பவம் நடந்து 3வது நாள் நான் வெளியே சென்றபோது, மக்ஸூம் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு நபர் வழியில் என்னைச் சந்தித்தார். நான் அவரிடம், நீங்கள் உங்களுடைய மூதாதையர்களின் மார்க்கத்தை விட்டு விட்டு முஹம்மதுடைய மார்க்கத்தை ஏற்றுக் கொண்டீர்களா? என்று கேட்டேன். நான் ஏற்றுக் கொண்டேன் என்றால், அது என்ன பெரிய விஷயம்! என்னை விட அதிகமாக யார் மீது உங்களுக்கு உரிமை இருக்கிறதோ அவர்களும் தான் ஏற்றுக் கொண்டார்கள் என்று அவர் கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அது யார்? என்று நான் கேட்டேன். அதற்கு அவர், உங்கள் சகோதரியும் சகோதரியின் கணவரும் ஆவார்கள் என்று கூறினார். இதைக்கேட்டு விட்டு, நான் என் சகோதரி வீட்டுக்குச் சென்றேன். நான் கதவு அடைக்கப்பட்டிருப்பதைக் கண்டேன். அங்கு ஏதோ வாசிக்கப்படும் மெல்லிய ஓசை எனக்குக் கேட்டது. எனக்காக கதவு திறக்கப்பட்டது. நான் உள்ளே நுழைந்து விட்டேன். உங்களிடமிருந்து எனக்கு என்ன (சப்தம்) கேட்டது? என்று கேட்டேன். நீங்கள் என்ன செவியுற்றீர்கள்? என்று அவர்கள் கூறினார்கள்.

இந்த உரையாடல் முத்திப்போனது. நான் மைத்துனரின் தலையைப் பிடித்து அடித்து அவருக்கு ரத்தம் வர வைத்து விட்டேன். எனது சகோதரி எழுந்து எனது தலையைப் பிடித்து இது உனது விருப்பத்திற்கு மாற்றமாக நடந்துள்ளது தான் என்று கூறினார். அதாவது நாங்கள் இஸ்லாத்தை ஏற்றது உனது விருப்பத்திற்கு மாற்றமான செயல் தான். எவ்வாறிருப்பினும் பிறிதோர் இடத்தில் அறிவிப்பில் சகோதரி காயமுற்றதாகவும் கூட குறிப்பு கிடைக்கப் பெறுகிறது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் மைத்துனரின் ரத்தத்தைப் பார்த்தபோது அல்லது சகோதரியின் ரத்தமாகவும் இருக்கலாம். எனக்கு வெட்கம் ஏற்பட்டது. நான் அமர்ந்து விட்டேன். எனக்கு இந்த நூலைக் காட்டுங்கள் என்று சொன்னேன். என் சகோதரி, அதைத் தூய மக்கள் மட்டுமே தொட முடியும். நீங்கள் உண்மை பேசுகிறீர்கள் என்றால் சென்று குளித்து விட்டு வாருங்கள் என்று கூறினார். ஆக நான் குளித்து விட்டு வந்து அமர்ந்து கொண்டேன்.

அப்போது அவர்கள் எனக்காக அந்த சுவடிகளை வெளியே எடுத்தார்கள். அதில் بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ என்று இருந்தது. நான், இவை மிகவும் பரிசுத்தமான தூய்மையான பெயர்கள் ஆயிற்றே என்று கூறினேன். அதற்கு பிறகு طٰهٰ مَآ اَنْزَلْنَا عَلَيْكَ الْقُرْاٰنَ لِتَشْقٰى என்று இருந்தது. அதிலிருந்து لَهُ الْاَسْمَآءُ الْحُسْنٰى சூரா தாஹாவின் வசனங்கள் 2 முதல் 9 வரை இருந்தன.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எனது உள்ளத்தில் அந்த மறை குறித்து மாபெரும் மகத்துவம் உருவானது. குரைஷியர்கள் இதை விட்டு ஓடுகிறார்கள். நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன் என்று நான் கூறினேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்கே என்று நான் கேட்டேன். அன்னார் தாரே அர்கம் எனும் இடத்தில் இருக்கிறார்கள் என்று என் சகோதரி கூறினார். நான் அங்கு சென்றேன். கதவைத் தட்டியபோது அங்கிருந்த சஹாபிகள் ஒன்று திரண்டு விட்டார்கள். உங்களுக்கு என்ன ஆனது? என்று அவர்களிடம் ஹம்ஸா (ரலி) கேட்டார்கள். அவர்கள் உமர் என்றனர். உமராகவே இருந்தாலும் சரி அவர் வெளியில் கதவருகே நிற்கிறார் என்றால் அவருக்காக கதவைத் திறந்து விடுங்கள். அவர் நல்ல நோக்கத்தோடு வந்திருந்தால் நாம் அவரை ஏற்றுக் கொள்வோம். அவர் தவறான எண்ணத்தில் வந்திருந்தால் நாம் அவரைக் கொன்று விடுவோம் என்று ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) கூறினார்கள்.

இந்த பேச்சுக்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் செவியுற்று விட்டார்கள். அன்னார் வெளியே வருகை தந்தபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கலீமா ஷஹாதத் கூறி விட்டார்கள்.

இதைக் கேட்டதும் வீட்டில் திரண்டிருந்த அனைத்து சஹாபிகளும் உரத்த குரலில், அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள். அதை மக்கத்தினர் கேட்டனர்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாம் உண்மையில் இல்லையா? என்று நான் கேட்டேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாம் உண்மையில் நிலைத்திருக்கவில்லையா? என்று கேட்டேன். அன்னார் கூறினார்கள்: ஏனில்லை? பின்னர் இந்த ஒளிந்திருத்தல் எதற்காக? என்று நான் கேட்டேன். நாம் நமது மார்க்கத்தை ஏன் மறைத்து வைத்துள்ளோம்? இதற்குப் பிறகு நாங்கள் அங்கிருந்து இரண்டு வரிசைகளில் அணி வகுத்து புறப்பட்டோம். ஒரு வரிசையில் நான் இருந்தேன். இன்னொரு வரிசையில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் இருந்தார்கள். எதுவரையென்றால் நாங்கள் மஸ்ஜித் ஹராமில் நுழைந்தோம்.

அப்போது குரைஷியர்கள் என்னையும், ஹம்ஸாவையும் பார்த்தார்கள். அவர்களுக்கு இதற்கு முன் ஒருபோதும் ஏற்பட்டிராத அளவு வருத்தமும், வேதனையும் ஏற்பட்டது. ஆக அந்த நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு ஃபாரூக் என்று பெயரிட்டார்கள். ஏனெனில் இஸ்லாத்திற்கு வலிமை கிடைத்தது. உண்மைக்கும், பொய்க்கும் மத்தியில் வித்தியாசம் ஏற்பட்டு விட்டது.

(ஜலாலுத்தீன் அப்துர் ரஹ்மான் பின் அபீ பக்ர் சயூத்தி அவர்கள் எழுதிய தாரீகுல் குலஃபா என்ற நூல் பக்கம் 91,92 – 1999 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் அரபியில் அச்சிடப்பட்டது)

அய்யூப் பின் மூஸா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஐயமின்றி அல்லாஹ் உண்மையை, உமருடைய நாவிலும், உள்ளத்திலும் நிலைநாட்டி விட்டான். மேலும் அவர் ஃபாரூக் ஆவார். ஏனென்றால் அல்லாஹ் அவர் மூலமாக உண்மைக்கும் பொய்யுக்கும் மத்தியில் வித்தியாசத்தை ஏற்படுத்தி விட்டான். (அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 143, பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உயரமான மற்றும் வலிமையான உடலுக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். தலையின் முன் பகுதியில் முடி இருக்கவில்லை. நிறம் சற்று செம்மையாகவும் மீசை அடர்த்தியாகவும் இருந்தது. அதன் ஓரங்களில் செந்நிறம் வெளிப்பட்டது. அன்னாரின் கன்னங்கள் மென்மையாக இருந்தன.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 484 உமர் பின் கத்தாப் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அறிவீனமான காலகட்டத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய செயல்கள் தொடர்பாக இவ்வாறு அறிவிப்பு கிடைக்கிறது. குதிரை சவாரி செய்வதும், குத்துச் சண்டை போடுவதும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு மிகவும் பிடித்தமான செயல்களாக இருந்தன. உக்காஸ் எனும் விழாவில் ஒவ்வொரு வருடமும் குத்துச் சண்டையில் பொதுவாகவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தான் வெற்றிப் பெற்று வந்தார்கள்.

இளமையில், அரபு நாட்டின் பொதுவான வழக்கத்திற்கேற்ப தமது தந்தையாரின் ஒட்டகங்களை மேய்த்து வந்தார்கள்.

(முஹம்மது ஹுஸைன் அவர்கள் எழுதிய ஸய்யிதுனா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 51,52, லாஹூரிலுள்ள இஸ்லாமி குதுப் கானாவில் அச்சிடப்பட்டது)

இஸ்லாத்திற்கு முன் அரபு நாட்டில் எழுதப்படிக்கும் வழக்கம் அறவே இல்லாமலிருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றிய போது குரைஷிய கோத்திரத்தில் வெறும் 17 பேருக்குத் தான் எழுதத் தெரியும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அப்பொழுது அந்தக் காலத்தில் எழுதப்படிக்க கற்றுக் கொண்டு விட்டார்கள்.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 1 பக்கம் 133 – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் குரைஷியர்களின் கண்ணியத்திற்குரிய மக்களில் ஒருவராகத் திகழ்ந்தார்கள். இஸ்லாத்தை ஏற்பதற்கு முன்பு, குரைஷியர்கள் தரப்பிலிருந்து தூது செல்லும் பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. குரைஷியர்கள் தங்களுக்கு மத்தியிலோ அல்லது அவர்களுக்கும் அந்நியர்களுக்கும் இடையிலோ போர் நடக்கும்போது அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை தூதுவராக அனுப்பி வந்தார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 642 உமர் பின் கத்தாப் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

அபிஸீனியாவை நோக்கி சில முஸ்லிம்கள் ஹிஜ்ரத் செய்தபோது அந்த நேரத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு பரீட்சையமானவர்கள் ஹிஜ்ரத் செய்து செல்வதை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பார்த்தபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் எதிர் நடவடிக்கை எப்படி இருந்தது! அன்னார் தற்பொழுது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருக்காதபொழுதும், கடுமையான இயல்புடையவராக இருந்தபொழுதும் அவர்களின் எதிர் நடவடிக்கை மிகவும் உருக்கமானதாக இருந்தது.

இது தொடர்பாக ஹஸ்ருத் உம்மு அப்தில்லாஹ் பின்த் அபீ ஹஸ்மா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாங்கள் அபிஸீனியா நாட்டை நோக்கி புறப்படலானபோது எனது கணவர் ஆமிர் பின் ரபீஆ தமது ஏதோவொரு வேலையாக சென்றிருந்தார்கள். ஆக அந்த நேரத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வந்தார்கள். என்னிடம் வந்து நின்றார்கள். அன்னார் அப்பொழுது வரை தமது இணைவைத்தலிலேயே நிலைப் பெற்றிருந்தார்கள். எங்களுக்கு அவர்கள் தரப்பிலிருந்து வகை வகையான துன்புறுத்தல்களையும் இன்னல்களையும் சகித்துக் கொள்ள வேண்டி இருந்து வந்தது.

அந்தப் பெண்மணி கூறுகிறார்கள்: என்னிடம், உம்மு அப்தில்லாஹ்வே! எங்கோ பயணமாகும் எண்ணம் தெரிகிறதே என்று அன்னார் கேட்டார்கள். ஆம்! கண்டிப்பாக நாங்கள் அல்லாஹ்வின் பூமியில் புறப்படுகிறோம். செல்கிறோம் எங்கேயோ! எங்கு செல்லலாம் என்று தேடுவோம். அல்லாஹ்வின் பூமி மிகவும் விசாலமானது. நீங்களோ எங்களுக்கு அதிகம் தொல்லை கொடுத்துள்ளீர்கள். எங்கள் மீது அதிகம் அநீதியிழைத்துள்ளீர்கள். எதுவரை என்றால், இப்பொழுது அல்லாஹ் எங்களுக்கு ஈடேற்றத்திற்கான வழியை உருவாக்கி விட்டான் என்று நான் கூறினேன்.

உம்மு அப்தில்லாஹ் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ் உங்களோடு இருப்பானாக என்று அன்னார் கூறினார்கள். உம்மு அப்தில்லாஹ் அறிவிக்கிறார்கள்: எத்தகைய உருக்கம் அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதை நான் அப்போது பார்த்தேனோ அதுபோன்று முன்னர் ஒருபோதும் பார்த்ததில்லை. அதற்குப் பிறகு அவர்கள் சென்று விட்டார்கள். நாங்கள் புறப்பட்டது, அவர்களை வேதனையடையச் செய்து விட்டது என்று நான் நினைக்கிறேன்.

உம்மு அப்தில்லாஹ் அறிவிக்கிறார்கள்: ஆமீர் பின் ரபீஆ தமது வேலையை முடித்து விட்டு திரும்பியபோது நான் அவர்களிடம், அப்துல்லாஹ்வே! இப்பொழுது நீங்கள் உமரின் நிலையைப் பார்த்திருக்க வேண்டுமே! நமக்காக அவருடைய உருக்கத்தையும் வேதனையையும் பார்த்திருக்க வேண்டுமே என்று கூறினேன். அதற்கு அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்று உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா? இந்த விஷயத்தால் தாக்கமடைந்து, அன்னார் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா என்று ஆமீர் பின் ரபீஆ கேட்டார்கள்?

அந்தப் பெண்மணி கூறுகிறார்கள்: ஆம் என்று நான் கூறினேன். இதைக்கேட்ட அவர், அதாவது ஆமீர் பின் ரபீஆ கூறினார்: அவர் ஒருபோதும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார். கத்தாபுடைய கழுதை இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளுமேயொழிய நீங்கள் பார்த்தவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார்.

உம்மு அப்தில்லாஹ் கூறுகிறார்கள்: இஸ்லாம் தொடர்பாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கொண்டுள்ள கடுமையையும் வன்மையையும் பார்த்து, அதனால் நிராசையடைந்து ஆமீர் பின் அப்தில்லாஹ் அவர்கள் இந்த விஷயத்தைக் கூறினார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 159 இஸ்லாம் உமர் பின் கத்தாப் – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது)

அதாவது, ஒருவர் இவ்வளவு கடுமையான எதிரியாக இருக்கும்போது அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வது எப்படி நடைபெற முடியும்!

இந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் தமது பாணியில் கூறியுள்ளார்கள்: அன்னார் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இஸ்லாத்தோடு கடுமையான பகைமை இருந்தது. ஆனால் அவர்களிடம் ஆன்மீக திறமையும் இருந்தது. அதாவது கடுமையான கோபப்படும் நிலையிலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரின் சஹாபிகளுக்கு இன்னல்களை ஏற்படுத்திய நிலையிலும் அவர்களிடம் உருக்கம் எனும் உணர்வும் இருந்தது. ஆக அபிஸீனியாவை நோக்கி முதல் ஹிஜ்ரத் நிகழ்ந்தபோது இணைவைப்பவர்கள் தங்களைத் தடுத்து விடக்கூடாது; தங்களுக்குத் துன்பம் ஏதும் இழைத்துவிடக்கூடாது என்பதற்காக முஸ்லிம்கள் ஃபஜ்ர் தொழுகைக்கு முன்னர் மக்காவிலிருந்து புறப்பட ஆயத்தமானார்கள். மக்காவில், திருட்டு ஏதும் ஏற்படக்கூடாது என்பதற்காக இரவு வேளைகளில் சில தலைவர்கள் நகர்வலம் வரும் வழக்கம் இருந்தது. அவர்கள் தெருக்களில் ஆய்வு செய்து வருவார்கள். இந்த வழக்கத்திற்கேற்பவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் இரவில் வலம் வந்து கொண்டிருந்தார்கள்.

அப்போது ஓரிடத்தில் வீட்டின் அனைத்துப் பொருட்களும் மூட்டை கட்டப்பட்டிருப்பதைக் கண்டார்கள். அன்னார் முன்னால் சென்றார்கள். ஒரு சஹாபியா பொருட்களுக்கு அருகில் நின்று கொண்டிருந்தார்கள். அந்த சஹாபியாவின் கணவரோடு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு பழக்கமிருந்திருக்கும். எனவே அன்னார் அந்த சஹாபியாவைப் பார்த்து, பெண்மணி இது என்ன விஷயம்? ஏதோ நீண்ட பயணத்தில் செல்வதுபோன்று எனக்குத் தெரிகிறதே? என்று கேட்டார்கள்.

அப்போது அந்த சஹாபியாவின் கணவர் அங்கு இல்லை. அவர் அங்கு இருந்திருந்தால் மக்காவின் இணைவைப்பவர்களின் எதிர்ப்பு மற்றும் பகைமையின் காரணமாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்த விஷயத்தைக் கேட்டு ஒருவேளை அவர் ஏதாவது சாக்குப்போக்கு கூறியிருக்கலாம். செல்கிறோம், செல்லவில்லை. அல்லது சிறிய பயணம் தான். அல்லது எங்கு செல்கிறோம். அருகே ஏதாவது இடத்திற்கு தான் (போன்று ஏதாவது கூறியிருக்கலாம்).

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஆனால் பெண்ணுக்கு இந்த உணர்வு இருக்கவில்லை. அந்தப் பெண்ணுக்கு இந்த சிந்தனை வரவில்லை. அல்லது இருந்தது என்றாலும், அவர் உண்மையோடு செயல்பட்டார். அந்த சஹாபியா, உமரே! நாங்களோ மக்காவை விட்டுச் செல்கிறோம் என்று கூறினார். அன்னார், நீங்கள் மக்காவை விட்டுச் செல்கிறீர்களா? என்று கேட்டார்கள். அந்த சஹாபியா, ஆமாம். நாங்கள் மக்காவை விட்டுச் செல்கிறோம் என்று கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், நீங்கள் ஏன் மக்காவை விட்டுச் செல்கிறீர்கள்? என்று கேட்டார்கள். உமர்! நாங்கள் ஏன் மக்காவை விட்டுச் செல்கிறோம் என்றால் உங்களுக்கும் உங்கள் சகோதரர்களுக்கும் நாங்கள் இங்கே இருப்பது பிடிக்கவில்லை. மேலும் ஏக இறைவனை வணங்குவதற்கு இங்கு எங்களுக்கு சுதந்திரம் இல்லை. எனவே தான் நாங்கள் தாய் நாட்டை விட்டு விட்டு வேறு ஒரு நாட்டுக்கு செல்கிறோம் என்று சஹாபியா பதிலளித்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்திற்கு கடுமையான எதிரியாக இருந்தபோதிலும் அவர்கள் சுயமே முஸ்லிம்களை அடிப்பதற்கு ஆயத்தமாக இருந்தபோதிலும் இரவின் இருளில் அந்த சஹாபியாவிடமிருந்து இந்த பதிலைக் கேட்டு, அதாவது உங்களுக்கும் உங்கள் சகோதரர்களுக்கும் நாங்கள் இங்கே இருப்பது பிடிக்கவில்லை. மேலும் நீங்கள் எங்களை சுதந்திரமான முறையில் ஏக இறைவனை வணங்க விடுவதில்லை. எனவே நாங்கள் தாய் நாட்டை விட்டுச் செல்கிறோம் என்ற இந்த விஷயத்தைக் கேட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார்கள். மேலும் அந்த சஹாபியாவின் பெயரை எடுத்து, நல்லது! செல்லுங்கள். இறைவன் உங்களுக்குப் பாதுகாவலனாக இருப்பானாக என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு எத்தகைய உருக்கமான உணர்வு ஏற்பட்டதென்றால், அன்னார் நான் வேறு பக்கம் முகம் திருப்பவில்லை என்றால் எனக்கு அழுகை வந்து விடும் என்று எண்ணியதாக தெரிய வருகிறது. இதற்குள் அந்த சஹாபியாவின் கணவரும் வந்து விட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்திற்கு கடுமையான எதிரி என்பதை அவர் புரிந்து வைத்திருந்தார். அவர் அன்னார் அங்கு நின்றிருக்க கண்டபோது, இவர் நமது பயணத்தில் தடை ஏதும் ஏற்படுத்தி விடப்போகிறார் என்று நினைத்தார்.

அவர் தமது மனைவியிடம், இவர் இங்கே எங்கிருந்து வந்தார்? என்று கேட்டார். அந்தப் பெண்மணி, அவர் இவ்வாறு வந்தார். நீங்கள் எங்கே செல்கிறீர்கள்? என்று கேட்டார் என்று கூறினார். அந்த நபர், இவர் தீங்கு ஏதும் இழைத்து விடப்போகிறார் என்று கூறினார். அப்பொழுது அன்னார் செல்ல ஆரம்பித்திருப்பார்கள். அங்கு நிற்கும்போது பார்த்திருப்பார். அதற்குப் பிறகு, அவர் வருவதற்கு முன்னரே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அங்கிருந்து புறப்பட்டிருந்தார்கள். அல்லது அவரைச் சந்தித்த பிறகு புறப்பட்டார்கள். எப்படி இருந்தாலும் அந்த நபர், ஏதாவது தீங்கிழைத்து விடப்போகிறார் என்று அவர் கூறினார்.

அந்த சஹாபியா கூறினார்: எனது சிறிய தந்தையின் மகனே! (அரபு நாட்டுப் பெண்கள் பொதுவாக தமது கணவன்மார்களை சிறிய தந்தையின் மகன் என்று அழைத்து வந்தார்கள்). நீங்களோ! அவர் ஏதும் தீங்கிழைத்து விடப்போகிறார் என்று கூறுகிறீர்கள். எனக்கோ, என்றாவது ஒரு நாள் அவர் முஸ்லிமாகி விடுவார் என்று தோன்றுகிறது. ஏனென்றால், உமரே! நீங்களும் உங்கள் சகோதரர்களும் எங்களை சுதந்திரமான முறையில் இறைவனை வணங்கவிடுவதில்லை; எனவே தான் நாங்கள் மக்காவை விட்டுச் செல்கிறோம் என்று நான் கூறியபோது, அவர்கள் முகத்தை திருப்பிக் கொண்டு, சரி நல்லது. இறைவன் உங்கள் பாதுகாவலனாக இருப்பானாக என்று கூறினார். அவருடைய குரலில் நடுக்கம் இருந்தது. அவருடைய கண்களில் கண்ணீர் ததும்பியது என்று நான் நினைக்கிறேன். எனவே நிச்சயமாக ஒரு நாள் அவர் முஸ்லிமாகி விடுவார் என்று தெரிகிறது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 6 பக்கம் 140, 141)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் துஆக்கள்செய்தார்கள். இது தொடர்பாக அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

اَللّٰهُمَّ أَعِزَّ الْإِسْلَامَ بِأَحَبِّ هٰذَيْنِ الرَّجُلَيْنِ إِلَيْكَ بِأَبِي جَهْلٍ أَوْ بِعُمَرَ بْنِ الْخَطَّابِ

அல்லாஹ்வே! அபூஜஹில் மற்றும் உமர் பின் கத்தாப் இந்த இரண்டு நபர்களில் உனக்கு அதிகம் பிரியமானவர் மூலமாக இஸ்லாத்திற்கு கண்ணியத்தை வழங்குவாயாக.

(சுனன் திர்மிதி அப்வாபுல் மனாகிப் பாப் ஃபி மனாகிப் அபி ஹஃப்ஸ் உமர் பின் கத்தாப் ஹதீஸ் எண் 3681)

இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இவர்கள் இருவரில், அல்லாஹ்வுக்கு அதிகம் பிடித்தமானவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆவார்கள்.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

اَللّٰهُمَّ أَيِّدِ الدِّيْنَ بِعُمَرَ بْنِ الْخَطَّابِ

அல்லாஹ்வே! உமர் பின் கத்தாப் மூலமாக இஸ்லாத்திற்கு ஆதரவளிப்பாயாக.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

اَللّٰهُمَّ أَعِزَّ الْإِسْلَامَ بِعُمَرَ بْنِ الْخَطَّابِ خَاصَّةً

அல்லாஹ்வே! குறிப்பாக உமர் பின் கத்தாப் மூலமாக இஸ்லாத்திற்கு ஆதரவளிப்பாயாக.

(முஸ்தத்ரிக் லில்ஹாகிம் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 89 கிதாப் மஃரூஃபத்துஸ் சஹாபா பாப் மின் மனாகிப் அமீருல் மூமினீன் உமர் பின் கத்தாப், ஹதீஸ் எண் 4483, 4485 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு ஒரு நாள் முன்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள்:

اَللّٰهُمَّ أَيِّدِ الْإِسْلَامَ بِأَحَبِّ الرَّجُلَيْنِ إِلَيْكَ، عُمَرَ بْنِ الْخَطَّابِ أَوْ عَمْرِو بْنِ هِشَامٍ

அல்லாஹ்வே! உமர் பின் கத்தாப் அல்லது அம்ர் பின் ஹிஷாம் ஆகிய இந்த இரண்டு நபர்களில் யார் உனக்கு அதிகம் பிரியமானவரோ அவர் மூலமாக இஸ்லாத்திற்கு ஆதரவளிப்பாயாக!

عُمَرَ بْنِ الْخَطَّابِ أَوْ عَمْرِو بْنِ هِشَامٍ

உமர் பின் கத்தாப் மூலமாக அல்லது அம்ர் பின் ஹிஷாம் மூலமாக.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபோது, ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் இறங்கினார்கள். அவர்கள் கூறினார்கள்: முஹம்மதே (ஸல்)! உமர் இஸ்லாத்தை ஏற்றதனால் வானத்தில் இருப்பவர்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இது தப்காத்துல் குப்ராவின் அறிவிப்பாகும்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 143 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக மேற்கொண்டு இவ்வாறு உள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நபித்துவத்தின் 6 ஆம் ஆண்டில் துல் ஹஜ்ஜா மாதத்தில் இஸ்லாத்தை ஏற்றார்கள். இஸ்லாத்தை ஏற்றதற்குக் காரணமாக அமைந்த பல நிகழ்வுகளும் அறிவிப்புகளும் ஹதீஸ் மற்றும் வாழ்க்கை வரலாறு நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக ஓர் அறிவிப்பு இதுவாகும். இந்த அறிவிப்பு சீரத்துல் ஹல்பிய்யாவில் உள்ளது. ஒரு முறை அபூஜஹில் மக்களிடம் கூறினான்: குரைஷிய கூட்டமே! முஹம்மது (ஸல்) அவர்கள் உங்களுடைய கடவுள்களைத் தவறாகக் கூறுகிறார். உங்களை அறிவற்றவர்களாக உரைக்கிறார். மேலும் நீங்கள் வணங்குவது தொடர்பாக, அவை நரகின் விறகுகளாகின்றன என்று கூறினார். எனவே நான் அறிவிக்கிறேன். எவர் முஹம்மது (ஸல்) அவர்களை கொல்வாரோ அவர் என் தரப்பிலிருந்து 100 செந்நிற மற்றும் கருமை நிற ஒட்டகங்கள், ஆயிரம் ஊக்கியா வெள்ளி ஆகியவற்றை பரிசாக பெறத் தகுதியுடையவராவார். ஓர் ஊக்கியா 40 திர்ஹம் அதாவது ஏறத்தாழ 126 கிராம் ஆகும். சிலரின் பார்வையில் இதை விட அதிக அளவு கொண்டதாகும். ஆனால் எவ்வாறிருப்பினும், ஒரு மிகப்பெரிய தொகையை அவன் (பரிசாக அறிவித்திருந்தான்). ஓர் ஊக்கியா 126 கிராம் ஆகும். இது மிகப்பெரிய தொகையாகிறது. அது பரிசாக நிர்ணயிக்கப்பட்டது.

இரண்டாவது அறிவிப்பு இவ்வாறு வருகிறது. எவர் முஹம்மது (ஸல்) அவர்களைக் கொலை செய்வாரோ அவருக்கு இத்தனை ஊக்கியா தங்கம், இத்தனை ஊக்கியா வெள்ளி, இவ்வளவு கஸ்தூரி, இத்தனை விலையுயர்ந்த ஆடைகள் மட்டுமின்றி மேலும் பல பொருள்களையும் கொடுப்பதாக அறிவித்தான்.

இதைக்கேட்டு நான் இந்த பரிசைப் பெற தகுதியுடையவன் ஆவேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்று கூறினார்கள்.

உமரே! சந்தேகத்திற்கிடமின்றி இந்தப் பரிசு உம்முடையதாகும் என்று மக்கள் கூறினார்கள்.

இதற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அவர்களிடம் இது தொடர்பாக முறையாக உடன்படிக்கை செய்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இதற்குப் பிறகு நான் உருவிய வாளை எனது தோளில் தொங்க விட்டுக் கொண்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைத் தேடிப் புறப்பட்டேன். வழியில் ஓர் இடத்தைக் கடந்தேன். அங்கு ஒரு கன்று அறுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. நான் அந்தக் கன்றின் வயிற்றிலிருந்து இவ்வாறு ஓசை வரக்கேட்டேன்.

ஸரீஹ் குடும்பத்தைச் சேர்ந்தவரே! (ஸரீஹ் அறுக்கப்பட்டுக் கொண்டிருந்த அந்தக் கன்றின் பெயராகும்.) அழைக்கக்கூடிய ஒருவர் அழைக்கிறார். அவர் தெளிவான சொற்களில் கூறுகிறார்.

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு யாருமில்லை. முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்று சாட்சி பகர்வதன் பால் அவர் அழைக்கிறார்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இதில் என்னைக் குறித்தே கூறப்பட்டுள்ளது என்று எனக்கு நானே கூறிக்கொண்டேன். (லுகாத்துல் ஹதீஸ் தொகுதி 4 பக்கம் 527)

சீரத்துல் ஹல்பிய்யாவின் இந்த அறிவிப்பு சஹீஹானது என்றால், ஏதோ ஆன்மீகக் காட்சியாகத் தெரிகிறது. அதை அன்னார் அப்பொழுது கண்டார்கள் அல்லது எங்கிருந்தோ ஓசை வந்தது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக கிடைக்கும் மூன்றாவது அறிவிப்பு இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு நாள் நான் பைத்துல்லாஹ்வை வலம் வரும் எண்ணத்தில் சென்றேன். அப்பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நின்று கொண்டு தொழுது கொண்டிருந்தார்கள். அன்னார் தொழும்போது, சிரியா நாட்டை நோக்கி முகத் திருப்பிக் கொள்வார்கள். அதாவது பைத்துல் முகத்தஸின் கல்லை நோக்கி எப்படி நிற்பார்கள் என்றால், அன்னார் கஅபாவை தமக்கும் சிரியாவுக்கும் அதாவது பைத்துல் முகத்தஸுக்கும் நடுவில் வருமாறு செய்வார்கள். இவ்வாறு அன்னாரின் தொழுகை இடம் அஸ்வத் கல்லுக்கும் யமனிய மூலைக்கும் நடுவில் இருந்து வந்தது.

யமனிய மூலை என்பது கஅபாவின் தென்மேற்கு மூலையைக் குறிக்கும். அது யமன் நாட்டை நோக்கியுள்ளது. ஏனென்றால் இவ்வாறு அல்லாமல் பைஅத்துல் முகத்தஸ் முன் பக்கம் வராது. ஆக, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்தபோது, இன்று இரவு நானும், முஹம்மத் (ஸல்) அவர்கள் மறை ஓதுவதைக் கேட்பேன். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று செவியேற்பேன் என நினைத்தேன். பிறகு நான் யோசித்தேன். நான் கேட்பதற்கு அவர்களுக்கு அருகில் சென்றால் அன்னார் எச்சரிக்கை ஆகிவிடுவார்கள்..

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

எனவே நான் அஸ்வத் கல் பக்கமாக வந்தேன். கஅபா ஆலயத்தின் திரைக்குப் பின்னால் சென்று, மெதுமெதுவாக நடக்க ஆரம்பித்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வாறே தொழுகையில் மூழ்கியிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சூரா ரஹ்மானை ஓதினார்கள். எதுவரையென்றால், நான் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு சரியாக முன்னால் வந்து விட்டேன். எந்தப் பக்கம் அன்னார் முகம் திருப்பியிருந்தார்களோ (அந்தப் பக்கம் வந்து விட்டேன்.)

எனக்கும் அன்னாருக்கு இடையில் கஅபாவின் திரையைத் தவிர வேறு எதுவும் இல்லை. நான் திருக்குர்ஆனை செவியுற்றபோது, அதன் காரணமாக எனது உள்ளம் உருகி விட்டது. நான் அழ ஆரம்பித்தேன். எனக்குள் இஸ்லாம் நுழைந்து விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தொழுகையை நிறைவு செய்யும் வரை நான் அதேபோன்று என் இடத்தில் நின்று கொண்டிருந்தேன். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்பிச் சென்றார்கள். அப்பொழுது, நான் அவர்களுக்குப் பின்னால் செல்ல ஆரம்பித்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது காலடி ஓசையைக்கேட்டு என்னை அடையாளம் கண்டு கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நான் அவர்களுக்கு ஏதாவது துன்பம் தருவதற்காக, அவர்களைப் பின் தொடர்வதாக நினைத்து விட்டார்கள். அவர்கள் என்னை அதட்டினார்கள். கத்தாபின் மகனே! நீ இவ்வளவு இரவு போன பிறகு எந்த நோக்கத்தில் வந்திருக்கிறாய்? என்று கேட்டார்கள். அதற்கு நான், அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்கள் மீதும் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து வந்திருப்பதன் மீதும் நம்பிக்கை கொள்வதற்காக வந்துள்ளேன் என்று கூறினேன்.

நான்காவது அறிவிப்பு இவ்வாறு கிடைக்கப் பெறுகிறது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஓர் இரவு எனது சகோதரிக்குப் பிரசவ வலி ஏற்பட்டது. அப்பொழுது நான் வீட்டிலிருந்து புறப்பட்டேன். துஆ செய்வதற்காக கஅபாவின் திரைகளோடு ஒன்றிப்போனேன். அப்பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள். அல்லாஹ் நாடிய அளவு அஸ்வத் கல்லுக்கு அருகில் தொழுதார்கள். பிறகு, புறப்பட்டார்கள்.

அப்பொழுது நான், அதற்கு முன்பு எப்பொழுதும் கேட்டிராத மறையை ஓதக் கேட்டேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புறப்பட்டபோது, நான் அவர்களுக்குப் பின்னால் செல்ல ஆரம்பித்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், யார்? என்று கேட்டார்கள். நான், உமர் ஆவேன் என்று பதிலளித்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உமரே! நீ என்னைப் பகலிலும் விடுவதில்லை; இரவிலும் விடுவதில்லை என்று கூறினார்கள். இதைக் கேட்ட நான், அவர்கள் எனக்கு எதிராக துஆ செய்து விடப்போகிறார்கள் என்று அஞ்சினேன். ஆக நான் உடனடியாக أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَأَنَّكَ رَسُوْلُ اللهِ என்று கூறினேன். அதாவது அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் எவருமில்லை; மேலும் நிச்சயமாக தாங்கள் அல்லாஹ்வின் தூதராவீர்கள் என்று நான் சாட்சி பகர்கிறேன்.

அப்பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உமரே! நீர் உமது இஸ்லாத்தை மறைத்து வைக்க விரும்புகிறாயா? என்று கேட்டார்கள். அதற்கு இல்லை! தங்களை உண்மையான மார்க்கம் வழங்கி அனுப்பிய அவன் மீதாணையாக! நான் எனது இணை வைத்தலை பகிரங்கமாக பறைசாற்றியது போன்றே, நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதையும் பகிரங்கமாக அறிவிப்பேன் என்று நான் கூறினேன்.

இதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வைப் புகழ்ந்தார்கள். மேலும் உமரே! அல்லாஹ் உம்மை நேர்வழியில் நிலைத்திருக்கச் செய்வானாக என்று கூறினார்கள். இதற்குப் பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது நெஞ்சில் கை வைத்து எனது உறுதியான பாதத்திற்காக துஆ செய்தார்கள். இதற்குப் பிறகு நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து சென்று விட்டேன். அன்னார் தமது வீட்டிற்குச் சென்று விட்டார்கள்.

(அஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 1 பக்கம் 469 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக, 5வது மற்றும் பிரபலமான அறிவிப்பு உள்ளது. அதன் ஓரளவு விளக்கம் சுருக்கமாக முன்னரே எடுத்துரைக்கப்பட்டு விட்டது. அது இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஒரு நாள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வாளை ஏந்தியவாறு புறப்பட்டார்கள். வழியில் ஸுஹ்ரா கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு நபர் சந்தித்தார். அவர் அன்னாரிடம், உமரே! எங்கே செல்கிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், முஹம்மத் (ஸல்) அவர்களைக் கொலை செய்யப் போகிறேன் என்று பதிலளித்தார்கள். நவூதுபில்லாஹ்.

அந்த நபர், முஹம்மத் (ஸல்) அவர்களைக் கொலை செய்து விட்டு உங்களால் ஹாஷிம் மற்றும் ஸுஹ்ரா கோத்திரத்தினரிடமிருந்து பாதுகாப்பாக இருந்து விட முடியுமா? என்று கேட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், நீயும் மார்க்கத்தை விட்டு அகன்று விட்டாய் என்று நினைக்கிறேன் என்று கூறினார்கள்.

நீ இருந்த உனது மார்க்கத்தை விட்டும் அகன்று விட்டாய் என்று அவரிடமும் கூறினார்கள். அந்த மனிதர், உமரே! நான் உமக்கு இதை விட ஆச்சரியமான விஷயத்தைக் கூறட்டுமா? நான் மார்க்கத்தை விட்டு அகன்று விட்டதாக நீங்கள் கூறுகிறீர்கள். இதை விடப் பெரிய விஷயத்தைக் கூறுகிறேன். உங்கள் சகோதரி மற்றும் சகோதரியின் கணவர் இருவரும் மார்க்கத்தை விட்டு அகன்று விட்டார்கள். மேலும் நீங்கள் இருக்கும் அந்த மார்க்கத்தை விட்டுச் சென்று விட்டார்கள் என்று அவர் கூறினார்.

இதைக் கேட்டவுடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அவர்கள் இருவரையும் பழித்துரைத்தவாறு அவர்களது வீட்டிற்குச் சென்றார்கள். அவர்கள் இருவருக்கும் அருகில், முஹாஜிர்களில் ஒரு சஹாபியான ஹஸ்ரத் கத்தாப் (ரலி) அவர்கள் இருந்தார்கள்.

ஹஸ்ரத் கத்தாப் (ரலி) அவர்களின் நற்குறிப்பில் நான் முன்னரும் இந்த சம்பவத்தை எடுத்துவைத்துள்ளேன். அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் குரலைக் கேட்டதும் வீட்டிற்குள் ஒளிந்து கொண்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வீட்டிற்குள் நுழைந்தபோது, நீங்கள் என்ன படித்துக் கொண்டிருந்தீர்கள்? உங்களிடமிருந்து நான் கேட்ட அந்த ஓசை என்ன? என்று கேட்டார்கள். அப்பொழுது அவர்கள் சூரா தாஹா ஓதிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் எங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தோம். வேறு ஒன்றுமில்லை என்று அவர்கள்

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், நீங்கள் இருவரும் உங்கள் மார்க்கத்தை விட்டு அகன்று விட்டதாக நான் கேள்விப்பட்டேனே! என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மைத்துனர், உமரே! உங்கள் மார்க்கத்தைத் தவிர வேறு ஏதாவது மார்க்கத்தில் உண்மை இருக்கிறதா? என்று நீங்கள் எப்பொழுதாவது ஆழ்ந்து சிந்தித்ததுண்டா? உண்மையைத் தேட வேண்டும். ஒருவேளை மற்ற மார்க்கத்தில் உண்மை இருக்கலாம் என்று நீங்கள் ஒருபோதும் ஆழ்ந்து சிந்திக்கவே இல்லை என்று கூறினார். இதைக் கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது மைத்துனரைப் பிடித்து சரமாரியாக அடித்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சகோதரி தமது கணவரைக் காப்பாற்றுவதற்காக வந்தார்கள். அப்பொழுது, அவர்கள் மீதும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கை ஓங்கி விட்டார்கள். இதனால், அன்னாரின் சகோதரியின் முகத்திலிருந்து ரத்தம் வழிய ஆரம்பித்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சகோதரி, உமரே! உண்மை உனது மார்க்கத்தைத் தவிர வேறு மார்க்கத்தில் இருந்தால், அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் எவருமில்லை என்று நீ சாட்சி பகர வேண்டும். மேலும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்று நீ என்னிடம் சாட்சி பகர வேண்டும் என்று கோபத்தில் கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தளர்ந்து விட்டதால், உங்களிடம் இருக்கும் நூலை என்னிடம் தாருங்கள். நான் அதை வாசிக்கட்டும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவராக இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சகோதரி, நீங்கள் அசுத்தமாக இருக்கின்றீர்கள். யாரும் அதை அசுத்தமான நிலையில் தொடக்கூடாது. எனவே எழுந்து சென்று குளித்து விட்டு அல்லது வுளூ செய்து விட்டு வாருங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எழுந்து சென்று வுளூ செய்தார்கள். மேலும் சூரா தாஹாவின் إِنَّنِىٓ أَنَا ٱللَّهُ لَآ إِلَٰهَ إِلَّآ أَنَا۠ فَٱعْبُدْنِى وَأَقِمِ ٱلصَّلَوٰةَ لِذِكْرِىٓ அதாவது நிச்சயமாக நானே அல்லாஹ்! என்னையன்றி வேறெவனும் வணக்கத்திற்குரியவன் இல்லை. எனவே நீர் என்னையே வணங்கி, என்னை நினைவு கூர்வதற்காகத் தொழுகையை நிலைநாட்டுவீராக எனும் வசனத்தை அடைந்தபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், எனக்கு முஹம்மத் (ஸல்) அவர்கள் இருக்கும் இடத்தைக் கூறுங்கள் என்று கூறினார்கள்.

இந்த விஷயத்தைக் கேட்டு ஹஸ்ரத் கப்பாப் (ரலி) அவர்களும் வீட்டில் (ஒளிந்திருந்த இடத்தில்) இருந்து வெளியேவந்து, உமரே! உமக்கு நற்செய்தி. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவரகள் வியாழக்கிழமை இரவு செய்த துஆ உம்முடைய ஹக்கில் நிறைவேற வேண்டும் என்பது எனது ஆசை என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள்:

اَللّٰهُمَّ أَعِزَّ الْاِسْلَامَ بِعُمَرَ بْنِ الْخَطَّابِ اَوْ بِعَمْرِو بْنِ هِشَامٍ

அல்லாஹ்வே! உமர் பின் கத்தாப் அல்லது அம்ர் பின் ஹிஷாம் மூலமாக இஸ்லாத்திற்கு கண்ணியமளிப்பாயாக.

அப்பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஃபா மலைக்கு அருகில் இருந்த, அந்த வீட்டில் இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நடக்க ஆரம்பித்தார்கள். எதுவரை என்றால், அந்த வீட்டிற்குள் நுழைந்து விட்டார்கள். அப்பொழுது வீட்டின் கதவருகே ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களும், ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஏனைய நபித்தோழர்களும் இருந்தார்கள். மக்கள் உமரைக் கண்டு அஞ்சுகிறார்கள் என்பதைப் பார்த்தபோது ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

உமர் வந்திருக்கிறார். நல்ல எண்ணமுடையவராக அல்லாஹ் அவரைக் கொண்டு வந்திருந்தால், அவர் இஸ்லாத்தை ஏற்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவார். இதைத்தவிர வேறு ஏதாவது எண்ணம் இருக்கிறது என்றால், அவரைக் கொல்வது எங்களுக்கு சுலபமான செயல் ஆகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டிற்குள் இருந்தார்கள். அன்னாருக்கு வஹீ இறங்கிக் கொண்டிருந்தது. அன்னாரும் வெளியே வருகை தந்தார்கள். உமருக்கு அருகில் வந்து அவருடைய நெஞ்சில் கையை வைத்து, உமரே! வலீத் பின் முகைராவுக்கு இறக்கியதுபோன்று, உம்மீதும் அல்லாஹ் இழிவையும் வேதனையளிக்கக்கூடிய தண்டனையையும் இறக்கும் வரை நீ திருந்தமாட்டாயா? என்று கேட்டார்கள்.

பிறகு அன்னார் அல்லாஹ்விடம் இவ்வாறு துஆ செய்தார்கள்: அல்லாஹ்வே! இவர் உமர் பின் கத்தாப் ஆவார். அல்லாஹ்வே! உமர் பின் கத்தாப் மூலமாக மார்க்கத்திற்கு கண்ணியத்தை வழங்குவாயாக.

இதற்குப் பிறகு, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், நீங்கள் அல்லாஹ்வின் தூதராவீர்கள் என்று நான் சாட்சி பகர்கிறேன் என்று கூறி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இஸ்லாத்தைப் பரப்புவதற்காக வெளியே புறப்படுங்கள் என்று கூறினார்கள்.

மஃமர் மற்றும் ஸுஹ்ரீ (ரலியல்லாஹு அன்ஹுமா) அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாரே அர்கமிற்கு வந்த பிறகு இஸ்லாத்தை ஏற்றார்கள். மேலும் தாரே அர்கமில் 40 அல்லது 40க்கு சற்று அதிகமான ஆண்களும், பெண்களும் இஸ்லாத்தை ஏற்ற பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றார்கள்.

தாரே அர்கம் என்பது எந்த இடம் அல்லது தலைமையகம் என்றால், அது ஒரு புதிதாக முஸ்லிம் ஆன அர்கம் பின் அர்கமுடைய வீடாக இருந்தது. மக்காவிலிருந்து சற்று வெளியில் இருந்தது. அங்கு முஸ்லிம்கள் ஒன்று திரண்டு வந்தனர். அது மார்க்கம் கற்பதற்கும், இறைவழிபாடுகள் செய்வதற்கும் ஒரு தலைமையகமாக இருந்தது. இந்தப் புகழின் காரணமாகவே, அது தாருல் இஸ்லாம் எனும் பெயரிலும் பிரசிதி பெற்றது. இது மூன்று ஆண்டுகள் வரை மக்காவில் தலைமையகமாக இருந்தது. அங்கேயே அமைதியாக இறைவணக்கம் செய்து வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சபைகள் கூட்டப்பட்டன.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு (முஸ்லிம்கள்) வெளிப்படையாக வெளியே புறப்பட ஆரம்பித்தார்கள். அறிவிப்பில் வருகிறது. இந்த தலைமையகத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கடைசி நபராவார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றதால் முஸ்லிம்களுக்கு வலிமை ஏற்பட்டது. அவர்கள் தாரே அர்கமிலிருந்து வெளியேறி பகிரங்கமாக தப்லீக் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 142, 143 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட இதே சம்பவம் சிறிது வேறுபாட்டுடன் பிறிதோர் இடத்தில் காணப் பெறுகிறது. இந்த இடத்தில், சூரா தாஹாவின் ஆரம்ப வசனங்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. ஆனால், இன்னோர் இடத்திலோ சூரா அல் ஹாதீதின் ஆரம்ப வசனங்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. அவற்றை


**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)



**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது சகோதரியின் இல்லத்தில் ஓதினார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 140 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக ஆறாவது ஓர் அறிவிப்பும் உள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு, ஒரு நாள் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தேடியவாறு புறப்பட்டேன். அன்னார் எனக்கு முன்பு பள்ளியைச் சென்றடைந்து விட்டதை நான் கண்டேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சூரா ஹாக்காவை ஓதத்துவங்கினார்கள். நான் திருக்குர்ஆனின் அமைப்பையும், வரிசைக் கிரமத்தையும் பார்த்து வியந்து போனேன். நான் கூறினேன்: குரைஷியர்கள் கூறுவதுபோன்று இவரோ கவிஞர் ஆவார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் இவ்வாறு யோசித்தபோது அன்னார் وَمَا هُوَ بِقَوْلِ شَاعِرٍ ۚ قَلِيلًا مَّا تُؤْمِنُونَ என்ற வசனத்தை ஓதினார்கள். இதன் பொருள், நிச்சயமாக (க் குர்ஆனாகிய) இது மதிப்பிற்குரிய ஒரு தூதரின் (மூலம் கொண்டு வரப்பட்ட) வசனமாகும். இது ஒரு கவிஞரின் வசனமன்று. ஆனால் நீங்கள் அறவே நம்பிக்கை கொள்வதில்லை.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இவரோ காஹின் – குறி சொல்பவர் என்று நான் கூறினேன். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த (வசனங்களை) ஓதினார்கள்:

وَلَا بِقَوْلِ كَاهِنٍ ۚ قَلِيلًا مَّا تَذَكَّرُونَ ۔ تَنزِيلٌ مِّن رَّبِّ الْعَالَمِينَ ۔

وَلَوْ تَقَوَّلَ عَلَيْنَا بَعْضَ الْأَقَاوِيلِ ۔ لَأَخَذْنَا مِنْهُ بِالْيَمِينِ ۔ ثُمَّ لَقَطَعْنَا مِنْهُ الْوَتِينَ ۔

فَمَا مِنكُم مِّنْ أَحَدٍ عَنْهُ حَاجِزِينَ

ஆக வசனத்தின் இறுதி வரை அன்னார் ஓதினார்கள். அதன் பொருள் இதுவாகும். அதாவது இது குறி சொல்பவரின் வசனமும் அன்று. ஆனால் நீங்கள் அறவே புரிந்து கொள்வதில்லை. இது உலகங்களின் இறைவனிடமிருந்து இறக்கப்பட்டதாகும். அவர் எந்தச் சொல்லையேனும் பொய்யான வெளிப்பாடாக எம்மீது சுமத்தியிருந்தால், நிச்சயமாக நாம் அவரை எம் வலக்கையால் பிடித்திருப்போம். பின்னர் நிச்சயமாக நாம் அவரை எம் வலக்கையால் பிடித்திருப்போம். பின்னர் நிச்சயமாக நாம் அவருடைய கழுத்துப் பெருநரம்புக் குழாயைத் துண்டித்திருப்போம். உங்களுள் எவராலும் அவரை (எம்முடைய தண்டனையிலிருந்து) காப்பாற்றியிருக்க முடிந்திருக்காது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அப்பொழுதிலிருந்து இஸ்லாம் என் உள்ளத்தில் குடிபுகுந்து விட்டது.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 1 பக்கம் 108, 109 முஸ்னத் உமர் பின் கத்தாப் ஹதீஸ் எண்107 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஏழாவது ஓர் அறிவிப்பும் கிடைக்கப் பெறுகிறது. அது புகாரியில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் எப்பொழுதெல்லாம் ஒரு விஷயம் தொடர்பாக, இது இப்படி என்று நான் நினைக்கிறேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறக்கேட்டேனோ, அது அவர்கள் கணிப்பதற்கு ஏற்பவே இருக்கும்.

ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அமர்ந்திருந்தார்கள். ஓர் அழகான மனிதர் அன்னாரைக் கடந்து சென்றார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், எனது கணிப்பு தவறாக இருக்கலாம். ஒன்று இந்த மனிதர் தனது அறிவீன மார்க்கத்தில் இருக்கிறார். அல்லது இவர் அவர்களுக்கு குறி சொல்பவராக இருந்தார். அவரை என்னிடம் அழைத்து வாருங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஆக அவரை அன்னாரிடம் அழைத்து வரப்பட்டபோது, அன்னார் அதையே அந்த மனிதரிடம் கூறினார்கள். அந்த மனிதர், ஒரு முஸ்லிம் நபர் இவ்வாறு வரவேற்கப்பட்ட இந்த நாளைப்போன்று எந்த நாளையும் நான் கண்டதில்லை என்று கூறினார். இந்த நபர் பிற்காலத்தில் முஸ்லிமாகி விட்டார்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஆணையிட்டுக் கூறுகிறேன். நீ கண்டிப்பாக எனக்கு சொல்ல வேண்டும். அந்த நபர் கூறினார்: நான் அறிவீன காலகட்டத்தில் அவர்களுக்குக் குறி சொல்பவனாக இருந்தேன்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், உன்னுடைய ஜின் உன்னிடம் கொண்டு வந்த வினோதமான விஷயம் ஏதும் உள்ளதா? என்று கேட்டார்கள். அந்த நபர் கூறினார்: ஒரு முறை நான் சந்தையில் இருக்கும்போது, அது என்னிடம் வந்தது. நான் அதில் பதட்டத்தை உணர்ந்தேன். அந்த ஜின், நீ ஜின்களைப் பார்த்ததில்லையா? அவை கவலை கொள்வதையும் திகைப்படைவதையும் பெண் ஒட்டகங்கள் மற்றும் அவற்றின் மேல் இருக்கும் பொதி சுமக்கும் பைகளை அவை சென்றடைவதையும் நீ பார்க்கவில்லையா? என்று கேட்டது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நீ உண்மையைக் கூறினாய். ஒரு முறை நான் அவர்களின் சிலைகளுக்கு அருகில் உறங்கிக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு நபர் பசுவின் கன்றைக் கொண்டு வந்தார். அவர் அதை அறுத்தபோது, குரல் கொடுக்கக்கூடிய ஒருவர் குரல் கொடுத்தார். நான் அதை விட உரத்த குரலில் கத்துபவர் யாரையும் கண்டதில்லை.

வரம்பு மீறிய எதிரியே! வெற்றி பெறக்கூடிய உன்னதமான பணி ஒன்று உள்ளது என்று அவர் கூறினார். அழகாக எடுத்தியம்பும் ஒரு நபர் உள்ளார். அவர் لَا إِلٰهَ إِلَّا الله அதாவது, உன்னைத் தவிர வேறெவரும் வணக்கத்திற்குரியவர் இல்லை என்று கூறினார். இதைக் கேட்டு மக்கள் எழுந்தனர். நான் கூறினேன்: இதற்குப் பின்னால் யார் இருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் நான் புறப்பட மாட்டேன். பிறகு மீண்டும் இவ்வாறு ஓசை கேட்டது: வரம்பு மீறிய எதிரியே! வெற்றி பெறக்கூடிய உன்னதமான பணி ஒன்று உள்ளது. அழகாக எடுத்தியம்பும் ஒரு நபர் உள்ளார்.

அவர் கூறினார்: لَا إِلٰهَ إِلَّا الله அதாவது உன்னைத் தவிர வேறெவரும் வணக்கத்திற்குரியவர் இல்லை. இதைக் கேட்டு நானும் எழுந்து நின்று விட்டேன். அதிக நேரம் ஆகியிருக்காது. இவர்கள் நபி என்று கூறப்பட்டது. புகாரியின் சில பிரதிகளில் لَا إِلٰهَ إِلَّا الله என்பதற்கு பதிலாக لَا إِلٰهَ إِلَّا أَنْتَ என்றும் வருகிறது. ஆக இது புகாரியின் அறிவிப்பாகும்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மனாகிப் அல் அன்ஸார் பாப் இஸ்லாம் உமர் பின் கத்தாப் (ரலி), ஹதீஸ் எண் 3866)

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக, வரலாறு மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களில் பல்வேறு அறிவிப்புகள் கிடைக்கின்றன.

மேலும் அவற்றில் எல்லாவற்றையும் விட பிரசித்தி பெற்றது, அதாவது அதிகமான நூல்களில் பதியப்பட்டுள்ளது, அந்த அறிவிப்பு தான். அதில் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வாளை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கொல்வதற்காகப் புறப்பட்டார்கள். நவூதுபில்லாஹ்.

வழியில் யாரோ ஒருவர், உங்களுடைய சகோதரயைப் பற்றி, உங்கள் வீட்டைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள் என்று கூறினார். அன்னார் தமது சகோதரி மற்றும் மைத்துனரின் வீட்டுக்குச் சென்றார்கள்.

இந்த அறிவிப்பு பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. பெரும்பாலான இடங்களில் இதுவே பதியப்பட்டுள்து. ஆக எண்ணற்ற அறிவிப்புகள் இன்னும் உள்ளன. அவற்றை நான் எடுத்துரைத்தேன்.

எவ்வாறாயினும் யாரெல்லாம் நான் எடுத்துரைத்த இந்த அறிவிப்புகளை சஹீஹானவையாகப் புரிந்தார்களோ, அவர்களில் பெரிய வரலாற்று ஆசிரியர்களும் வாழ்க்கை வரலாற்று எழுத்தாளர்களும் தத்தமது அறிவிப்புகள் மீது அதிகம் விவாதித்துள்ளார்கள். ஆனால் எவ்வாறிருப்பினும், சகோதரி மற்றும் மைத்துனரின் வீட்டில் நடந்தது. பிறகு அங்கிருந்து அன்னார் தாரே அர்கம் சென்றது தொடர்பாகக் கூறப்பட்டுள்ள அந்த அறிவிப்பை தான் நாம் சரியானதாக ஏற்கிறோம். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக, மேற்கூறப்பட்ட அனைத்து அறிவிப்புகளும் தத்தமது இடத்தில் சரியாக இருக்கலாம். இவ்வாறு கூறலாம். இது சாத்தியமும் தான். அதிலிருந்து இந்த முடிவுக்கு வரலாம்.

அதாவது பல்வேறு சந்தர்ப்பங்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உள்ளத்தில் மனமாற்ற நிகழ்வுகள் ஏற்பட்டு வந்தன. சில முறை மாற்றங்களுக்கான சம்பவங்கள் நடைபெற்று கொண்டிருக்கும். ஆனால் இறுதி முடிவு எடுக்கப்படுவதில்லை. கடைசி சம்பவத்தில் இதுவே நிகழ்ந்தது. அதாவது தமது சகோதரி மற்றும் மைத்துனரின் வீட்டில் திருக்குர்ஆனைக் கேட்டதும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்காக நுபுவ்வத்தின் அவையில் ஆஜராகி விட்டார்கள். எவ்வாறிருப்பினும் அல்லாஹ்வே நன்கறிவான்.

அப்பொழுது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு 33 வயது. அன்னார் தமது கோத்திரமான அதீ கோத்திரத்திற்கும் தலைவராக இருந்தார்கள். குரைஷியர்களில், தூதுவராக செல்லும் பொறுப்பும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. அப்போது, அன்னார் பைஅத் செய்து இஸ்லாத்தை ஏற்றார்கள். பொதுவாகவே, மிகவும் கம்பீரமானவராகவும் வீரராகவும் தைரியசாலியாகவும் இருந்தார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றதன் காரணமாக முஸ்லிம்களுக்கு மிகவும் வலிமை ஏற்பட்டது. அவர்கள் தாரே அர்கமிலிருந்து வெளியேறி, பகிரங்கமாக மஸ்ஜித் ஹராமில் தொழுகை நிறைவேற்றினார்கள்.

தாரே அர்கமில் நம்பிக்கை கொண்ட கடைசி சஹாபி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆவார்கள். மேலும் இது நபித்துவத்தின் 6வது ஆண்டின் கடைசி மாதத்தில் நடந்த சம்பவமாகும். அப்பொழுது மக்காவில் முஸ்லிம் ஆண்களின் எண்ணிக்கை 40 ஆகும்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 159)

இது தொடர்பாக மற்ற விஷயங்களை இனி வரும் காலங்களில் எடுத்துரைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

இப்பொழுது நான் சில மர்ஹூம்கள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அவர்களின் ஜனாஸா (தொழுகையையும்) தொழ வைப்பேன். அவர்களில் முதலாவது, அஹ்மத் முஹம்மத் உஸ்மான் ஷூத்தீ சாஹிப் ஆவார்கள். இவர்கள் முஹம்மத் உஸ்மான் ஷூத்தீ சாஹிப் அவர்களின் மகனாவார்கள். 9 ஏப்ரல் 2021 அன்று 87 வது வயதில் அன்னார் எகிப்தில் வஃபாத் ஆகிவிட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அஹ்மத் முஹம்மத் உஸ்மான் ஷூத்தீ சாஹிப் அவர்கள் யமன் நாட்டின் அத்ன் நகரத்தில் பிறந்தார்கள். மதிப்பிற்குரிய முபல்லிக் குலாம் அஹ்மத் சாஹிப் அவர்கள் அத்ன் சென்றிருந்தார்கள். அப்பொழுது ஷூத்தீ சாஹிப் அவர்கள் 14 வயதில் பைஅத் செய்தார்கள். அதற்குப் பிறகு அவர்களுக்கு அஹ்மதிய்யா ஜமாஅத் யமனில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றுவதற்கு நல்வாய்ப்பு கிடைத்தது. இவர்கள் வஃபாத் ஆகும் வரை, ஒரு நீண்ட காலமாக அஹ்மதிய்யா ஜமாஅத் யமனின் சத்ர் ஆக தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெற்றார்கள். வஃபாத் வரை அந்தப் பொறுப்பில் இருந்தார்கள்.

இவர்களின் திருமணம் டாக்டர் முஹம்மத் அஹ்மத் அத்னீ சாஹிப் அவர்களின் மகளான மதிப்பிற்குரிய வஸீமா முஹம்மத் சாஹிப் அவர்களோடு நடைபெற்றது. அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஹஸ்ரத் ஹாஜி முஹம்மத் தீன் சாஹிப் தெஹல்வீ மற்றும சஹாபியா ஹஸ்ரத் ஹஸீனா பீபீ சாஹிபா (ரலியல்லாஹு அன்ஹுமா) ஆகியோரின் மகன் வழிப் பேத்தியாவார்கள்.

ஷூத்தீ சாஹிப் அவர்களின் நிக்காஹ் ரப்வாவிலேயே நடைபெற்றது. ஆனால், அவர்கள் இல்லாதபோது நடைபெற்றது. ஆனால் எவ்வாறிருப்பினும் பிறகு அவர்களுக்கு மர்கஸுடன் தொடர்பு ஏற்பட்டது. ஷூத்தீ சாஹிப் அவர்களுக்கு ரப்வா செல்வதற்கும் நல்வாய்ப்பு கிடைக்கப் பெற்றது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களைச் சந்திக்கும் கண்ணியமும் கிடைக்கப் பெற்றது. அங்கு சான்றோர்களையும் சந்தித்தார்கள். சஹாபாவையும் சந்தித்தார்கள்.

ஷூத்து சாஹிப் அவர்கள் பிரிட்டனின் பல்வேறு பல்கலைக்கழங்களில் Nursing மற்றும் Health management-ல் உயர்க்கல்வி பயின்றார்கள். Liverpool பல்கலைக்கழத்தில் Health administration–ல் முதுகலைப்பட்டம் பெற்றார்கள். யமன் நாட்டின் மத்திய சுகாதார நிறுவனத்தில் டீன் பொறுப்பு உட்பட சுகாதார துறையில் ஏறக்குறைய 29 ஆண்டுகள் வரை பல்வேறு பொறுப்புகளில் இருந்தார்கள். மத்திய கிழக்கு நாடுகளில் மட்டுமின்றி, ஏனைய பல நாடுகளில் உலக சுகாதார அமைப்பின் தற்காலிக ஆலோசகராகவும் தொண்டாற்றும் நல்வாய்ப்பு வந்தது.

சில காரங்களாக நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். மேலும் சில மாதங்களுக்கு முன்பு எகிப்துக்கு இடம்பெயர்ந்து சென்று விட்டார்கள். இங்கு UK வருவதற்கு முயற்சி செய்தார்கள். பிறகு நோய் அதிகரித்ததன் காரணமாக சில நாட்கள் மருத்துவமனையில் இருந்து விட்டு ஏப்ரல் 9 அன்று தமது உண்மையான படைப்பாளனுக்கு முன் ஆஜராகி விட்டார்கள்.

மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். அன்னாரின் துணைவியார் மட்டுமின்றி, ஒரு மகன் முஹம்மத் ஷூத்து அமெரிக்காவில் மருத்துவராக உள்ளார். மூன்று மகள்கள் உள்ளனர். பேரன் பேத்திகள் உள்ளனர். மூத்த மகள் யமனில் இருக்கிறார். ஒரு மகள் ஜெர்மனியில் இருக்கிறார். மர்வா ஷூத்தீ சாஹிபா இங்கு நமது UK வில் இருக்கிறார். MTA அரபியாவில் தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெறுகிறார்கள்.

இவர்களின் மகள் வர்மா ஷூத்தீ கூறுகிறார்கள்: சொர்க்கம் தாயின் காலடியில் இருக்கிறது என்பது சரிதான். ஆனால் நான் எனது தந்தையாரிடமிருந்தும் தாய்மார்கள் காட்டுவதுபோன்ற பரிவைப் பெற்றேன். அல்லது இவ்வாறு கூறலாம், நான் தந்தையின் பாசத்திலும் தாயின் பாசத்திலும் ஒருபோதும் வித்தியாசத்தை உணரவே இல்லை.

அவரது மகள் கூறுகிறார்கள்: எனது தந்தையார் இறையச்சமுடையவராகவும், நற்செயலாற்றக் கூடியவராகவும் உயரிய நற்பண்புகளுக்கு சொந்தக்காரராகவும் மிகவும் பணிவுடையவராகவும் தன்னடக்கமுடையவராகவும் இருந்தார்கள். பொறுமை, உண்மை, அமானிதங்களைப் பேணுதல் ஆகிவற்றின் முழு வடிவமாகவும், ஏழைகளைக் கருத்திற் கொள்பவராகவும் மக்கள் அனைவருடனும் இன்னும் சொல்வதென்றால் மனித குலத்தை நேசிக்கக் கூடியவராகவும் இருநதார்கள். எனக்கு எழுதியிருக்கும் பலரும் இதே விஷயங்களை எழுதியுள்ளார்கள்.

இவர்களுக்கு அறிமுகமானவர்களான அந்நிய மக்களும் இதே விஷயங்களை எழுதியுள்ளனர். தமது பணிகளை மிகவும் நுணுக்கமான கண்ணோட்டத்தோடு நிவேற்றி வந்தார்கள். நேரத்தைப் பேணுபவராகவும், வாக்குறுதிகளை நிறைவேற்றுபவராகவும் இருந்தார்கள். பெரும்பாலும் இபாதத்களை, நஃபில்களை நிறைவேற்றி வந்தார்கள். கடமையான தொழுகைகளைக் கடைபிடிப்பதில் மிகவும் கவனமாக இருந்தார்கள்.

அன்னாரின் மகள் கூறுகிறார்: தாய் தந்தையர் இருவருக்கும் 2002 ஆம் ஆண்டு பைத்துல்லாஹ்வில் ஹஜ் செய்யும் நற்பாக்கியமும் கிடைக்கப் பெற்றது.

யமன் நட்டின் பொறுப்பு சதர் ஆன காலித் அலீ பஸரீ சாஹிப் கூறுகிறார்கள்: மர்ஹூம் அவர்கள் வயது முதிர்ந்த நிலையிலும் மதிப்பச்சத்தை ஏற்படுத்தும் இயல்புக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். நல்லுள்ளம் படைத்தவராகவும் எப்பொழுதும் புன்முருவர் செய்பவராகவும் வள்ளலாகவும், விருந்தோம்பல் செய்யக்கூடியவராகவும் இருந்தார்கள். ஒவ்வோர் அஹ்மதியோடும் கருணை வாய்ந்த தந்தையைப் போன்று நடந்து கொள்வார்கள்.

எப்பொழுது ஏதேனும் ஜமாஅத் தேவை ஏற்பட்டாலும் தமது ஜோபிலிருந்து செலவு செய்வார்கள். ஜமாஅத்திற்குப பயன்படும் பொருள்களை, உதாரணமாக, Printer, Fax Machine போன்றவற்றைத் தாமே வாங்குவார்கள். ஏழை, இயலாதவர்களுக்கு மிகவும் கருணை உள்ளம் கொண்டவராகவும், பரிவுகாட்டக் கூடியவராகவும் திகழ்ந்தார்கள். ஒவ்வோர் ஏழை அஹ்மதிக்கும் மனம் திறந்து செலவு செய்வார்கள்.

வயது முதிர்ந்த நிலையிலும் 2018 ஆம் ஆண்டு இவர்கள் அத்ன் நகரத்திலிருந்து ஸன்ஆ எனும் ஊர் வரை 20 மணி நேர நீளமான மற்றும் கடினமான பயணத்தை மேற்கொண்டார்கள். அப்போது சஊதி தாக்குதல் காரணமாக வழி மிகவும் அபாயகரமானதாக இருந்தது. ஆங்காங்கே சோதனையும் போடப்பட்டு வந்தது. முதுமை காரணமாக இவர்களுக்கு நடப்பதும் கடினமாக இருந்தது.

இவர்கள் இந்தப் பயணத்தை ஸன்ஆ ஜமாஅத்தோடு பெருநாள் தொழுவதற்காகவும், ஏழைக் குடும்பங்களுக்குப் பெருநாள் தொகை வழங்குவதற்காகவும் அவர்களின் மகிழ்ச்சியில் கலந்து கொள்வதற்காகவும் மேற்கொண்டார்கள். அப்பொழுது ஜமாஅத் மக்கள் அனைவருக்கும் இவர்களின் வருகையால் மகிழ்சசி ஏற்பட்டது.

அடுத்த குறிப்பு, மதிப்பிற்குரிய குரைஷி ஸகாவுல்லாஹ் சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் ஜல்ஸா ஸாலானா அலுவலகத்தின் கணக்காளராக இருந்தார்கள். இவர்களும் 9 ஏப்ரல் அன்று 87 வது வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَیۡهِ رَاجِعُوۡنَ

குரைஷி சாஹிப் அவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத், இவர்களின் தாய் வழிப் பாட்டனாரும், இவர்களின் துணைவியாரின் தந்தைவழிப் பாட்டனாருமான ஹஸ்ரத் குர்ஷீத் அலி சாஹிப் (ரலி) அவர்கள் மூலமாக வந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஸியால்கோட் வருகை தந்தபோது, ஹஸ்ரத் குர்ஷீத் அலீ சாஹிப் (ரலி) அவர்கள் 16 வயதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்யும் நல்வாய்ப்பு பெற்றார்கள்.

குரைஷி சாஹிப் அவர்களின் துணைவியார் வஃபாத் ஆகிவிட்டார்கள். ஐந்து மகள்களும், ஒரு மகனும் உள்ளனர். மகன் திருக்குர்ஆனை மனனம் செய்த ஹாஃபிழ் ஆவார். இங்கு UK விலே தான் வசிக்கிறார். ஒரு மகள் ரப்வாவின் நமது PS அலுவலகத்தின் ஊழியரின் துணைவியாராவார். இரண்டாவது மகளும் Manchester ல் உள்ளார். ஒரு மகள் வஃபாத் ஆகிவிட்டார்கள்.

1954 ஆம் ஆண்டு இவர்கள் ரிலீவிங் கிளர்க்காக ஜமாஅத் தொண்டைத் துவங்கினார்கள். சதர் நிக்ரான் போர்ட் ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்களின் கீழ் இவர்கள் பணியாற்றினார்கள். 58 ஆண்டுகளுக்கும் அதிகமாக இவர்கள் ரப்வாவின் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவில் ஊழியம் செய்திருக்கிறார்கள்.

இவர்களின் மகன் ஹாஃபிழ் ஷம்ஸுஸ் ஸுஹா சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்களுடன் இவர்களுக்குப் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. ஹஸ்ரத் மியான் பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்களின் வீட்டிற்கு சென்று வந்தார்கள். ஆரம்பத்தில் ஒரு நாள், முதல் முறையாக அவர்களுடைய வீட்டிற்குச் சென்றார்கள். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் இவர்களிடம், அமருங்கள் என்று கூறினார்கள்.

இவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சந்ததிக்கு முன்னால் எப்படி சரிசமமாக அமர்வது என்று நான் கூறினேன். இதற்கு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் கூறினார்கள்: அல் அம்று ஃபௌக்கல் அதப். அதாவது பணிவையும் மரியாதை வழங்குதலையும் விட கட்டளை மேலானது. இதைக் கேட்ட இவர்கள் அமர்ந்து விட்டார்கள். மிகவும் மரியாதை இருந்தது.

அவர்களது மகன் கூறுகிறார்கள்: எனது தந்தையார் மௌனமான இயல்புக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். ஜமாஅத்தாக ஐவேளைத் தொழுகைகளை பேணி வந்தார்கள். தஹஜ்ஜுத் தொழுகைகளையும் கடைபிடித்து வந்தார்கள். குடும்பத்தின் மூத்தவர்களைத் தமது வீட்டில் வைத்து அவர்களுக்குத் தொண்டாற்றி வந்தார்கள். சிலருடைய வஃபாத்தும் எங்கள் வீட்டிலேயே நிகழ்ந்தது. கிலாஃபத்தோடு மிகவும் நன்றியுணர்வும் அன்பும் கொண்ட தொடர்பு இருந்தது. எங்களிடையேயும் அதை உறுதிப்படுத்துவதற்கு முயற்சி மேற்கொண்டு வந்தார்கள்.

அவர்களது மகன் கூறுகிறார்கள்: குழந்தைப் பருவத்தில் என்னைத் தொழுகைக்கு உடன் அழைத்துச் செல்வார்கள். பெரும்பாலும் வழியில், எப்போது காலத்தின் கலீஃபா உங்களை ஏதாவது பணி செய்வதற்கு அழைத்தாலும் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று கூறி வந்தார்கள். சில ஏழைகளின் வீட்டுச் செலவுகளையும் இவர்கள் ஏற்றிருந்தார்கள்.

இவர்களின் மகள் அமத்துஸ் ஸலாம் கூறுகிறார்கள்: எனது தந்தையார் தமது சொந்த சொத்திலிருந்து ஒரு கனால் (கால் ஏக்கரில் பாதி அளவு) துண்டு நிலத்தை ரப்வாவில் உள்ள நஸீராபாத் சுல்தான் வட்டத்தில் பள்ளிவாசல் கட்டுவதற்காக சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் பெயருக்கு அன்பளிப்பாகக் கொடுத்து விட்டார்கள். ஒரு மாதத்தில் இரு முறை திருக்குர்ஆன் ஓதி முடிப்பார்கள்.

ஐந்து மகள்கள் மற்றும் ஒரு மகன் இருக்கிறார்கள். பிள்ளைகள் அனைவரையும் நன்றாகப் படிக்க வைத்தார்கள். அவர்களுக்கு நல்ல தர்பிய்யத் கொடுத்தார்கள்.

அடுத்த குறிப்பு, கனடாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய மலிக் காலிக் தாத் சாஹிப் அவர்களுடையது. இவர்கள் 85 வயது வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَیۡهِ رَاجِعُوۡنَ

இவர்களின் தாய்வழிப் பாட்டனார் காதியானைச் சேர்ந்த வணிகர் ஹஸ்ரத் ஷேக் நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியாவார்கள். இவர்களின் தந்தைவழிப் பாட்டனார் மதிப்பிற்குரிய மவ்லா தாத் சாஹிப் அவர்களுக்கு ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கைகளில் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணையும் நல்வாய்ப்பு கிடைத்தது. ஒரு நீண்ட காலம் கராச்சியில் ஹல்காவின் சதராக இவர்களுக்குத் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. கனடாவில் நிதித்துறையில் தொண்டாற்றி வந்தார்கள்.

தொழுகை மற்றும் நோன்பை முறையாக கடைபிடிக்கக் கூடியவராகவும் அனுதாபம் காட்டக் கூடியவராகவும், பரிவு காட்டக்கூடியவராகவும், ஏழைகளைக் கருத்தில் கொள்ளக் கூடியவராகவும், நற்பண்புள்ளவராகவும், கலப்பற்ற மற்றும் நன்றியுணர்வுள்ள மனிதராகவும் இருந்தார்கள். சந்தா செலுத்துவதிலும் பொருள் தியாகத்தில் பங்கு பெறுவதிலும் எப்பொழுதும் முன்னனியில் இருப்பார்கள். கிலாஃபத்தோடு நேசம் மிகுந்த பற்றுறுதியைக் கொண்ட தொடர்பு இருந்தது. இதை இவர்களிடம் நானும் பார்த்திருக்கிறேன். கிலாஃபத் குறித்து அசாதாரணமான தொடர்பு வெளிப்பட்டது. மர்ஹூம் அல்லாஹ்வின்

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 27 May 2021 Issue No. 21

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அருளால் ஆரம்பகால மூஸிகளில் ஒருவராவார். பின்விட்டுச் சென்றவர்களில் துணைவியார் மட்டுமின்றி, நான்கு மகன்களும் மூன்று மகள்களும் உள்ளனர். இவர்களின் ஒரு மகன் கனடாவின் தேசிய செயற்குழுவில் தொண்டாற்றுகிறார்கள்.

அடுத்த குறிப்பு, மதிப்பிற்குரிய சலீம் சாபிர் சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் நஸாரத் உமூரே ஆமாவின் ஊழியராக இருந்தார்கள். அன்னார் மார்ச் 27 அன்று 77 வது வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیۡہِ رَاجِعُوۡنَ

சலீம் சாபிர் சாஹிப் அவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான இவர்களின் தந்தை ஹஸ்ரத் மியான் நூர் முஹம்மத் சாஹிப் அவர்களின் மூலம் வந்தது. இவர்களின் தந்தையார் காதியானுக்கு அருகிலுள்ள வஞ்சவா(ன்) எனும் கிராமத்தைச் சேர்ந்தவர்களாவர். அன்னார் 1903 ஆம் ஆண்டு தாமே காதியான் சென்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கைகளில் பைஅத் செய்தார்கள். 19 மே 1962 ல் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவில் இவர்களுக்கு பணி நியமனம் செய்யப்பட்டது. இதற்குப் பிறகு, 1968 ல் தீவானிலிருந்து பிரைவேட் செகரட்டரி அலுவலகத்திற்கு இவர்களின் பணிமாற்றம் நடந்தது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவர்களைத் தமது அலுவலகத்திற்காகத் தாமே தேர்ந்தெடுத்தார்கள். பிறகு 1987 முதல் 2006 வரை உமூரே ஆமா கணக்கராக இருந்தார்கள். இவர்களின் தொண்டு காலமும் ஏறத்தாழ 59 வருடம் ஆகிறது. மர்ஹூம் மூஸியாவார்கள்.

இவர்களின் சகோதரரின் மகனும் இவர்களின் மருமகனும் கூறுகிறார்கள்: தஹஜ்ஜுத் தொழும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள். தொழுகைகளில் பொதுவாகவும் தஹஜ்ஜுதில் குறிப்பாகவும் எந்த அளவு வேதனையோடு துஆக்களை செய்து வந்தார்கள் என்றால், அருகில் அமர்ந்திருக்கும் மனிதனின் உள்ளமும் உருகிவிடும். புதிய சந்ததிகளுக்குக் காலத்தின் கலீஃபாவிற்குக் கட்டுப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக போதிப்பவராக இருந்தார்கள்.

தமது அலுவலக நேரம் விடவும் கூடுதலாக அலுவலகத்திற்கு நேரம் கொடுக்கக் கூடியராகவும் ஜமாஅத்தின் எந்த நபருடைய துன்பத்தையும் தமது துன்பமாகக் கருதக் கூடியவராகவும் மக்களின் சிரமங்களைத் தமது சிரமமாக நினைக்கக் கூடியவராகவும் மக்களின் பிரச்சனைகளுக்கு, காலத்தின் கலீஃபா அவர்களுக்குக் கட்டுப்படுதல் மற்றும் ஜமாஅத்திற்குக் கட்டுப்படுதலை முன்னிருத்தியவாறு தீர்வுகாணக் கூடியவராகவும் எப்போதும் சலவாத் ஓதக் கூடியவராகவும் மறைமுகமாக ஏழைகளுக்கு உதவக் கூடியவராகவும் எண்ணற்ற சிறப்புகளுக்கு சொந்தக்காரராகவும் திகழ்ந்தார்கள்.

அடுத்த குறிப்பு, மதிப்பிற்குரிய நயீமா லத்தீஃப் சாஹிபா அவர்களுடையதாகும். இவர்கள் அமெரிக்காவைச் சேர்ந்த சாஹிப்ஸாதா மஹ்தி லத்தீஃப் சாஹிப் அவர்களின் துணைவியாராவார்கள். இவர்கள் 10 மார்ச் அன்று வஃபாத் ஆனார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیۡہِ رَاجِعُوۡنَ

மர்ஹூமா அவர்களின் கணவர் சாஹிப்ஸாதா மஹ்தி லத்தீஃப் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் சாஹிப்ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் ஷஹீத் (ரலி) அவர்களின் மகன்வழிப் பேரராவார்கள். மர்ஹூமா 1969ல் பெஷாவர் பல்கலைக்கழகத்தில் தாவரவியலில் முதுகலைப் பட்டம் பெற்றார்கள். பிறகு பெஷாவரின் ஆராய்ச்சி நிறுவனத்தில் தாவரவியல் துறையில் ஆராய்ச்சி பணியைத் துவங்கினார்கள். 1972 வரை இந்தப் பணியுடன் இணைந்திருந்தார்கள். 1970 ஆம் ஆண்டு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் முன் வைத்த நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின்கீழ் தம்மை அர்ப்பணித்தார்கள். இவர்களின் தம்பி சயீத் மலிக் சாஹிப் அவர்களும் நைஜீரியா பயணமானார்கள். 1975 வரை அங்கு தங்கினார்கள். இதற்கிடையில் இவர்கள் Women Arabic teachers college Gusau–வின் முதல்வராகத் தொண்டாற்றி வந்தார்கள். 1975 அமெரிக்காவுக்கு பயணமாகி விட்டார்கள்.

அங்கு பிறகு அவர்கள் நேகார்ஸ்க்கா பல்கலைக்கழகத்தின் தாவரவியல் துறையில் ஆராய்ச்சி செய்பவராக பணியாற்றினார்கள். பின்னர் அங்கிருந்து மேரீலாந்து வந்து விட்டார்கள். இங்கு மேரீலாந்தில் தொடர்ந்து லஜ்னாவில் இவர்களுக்குப் பணியாற்ற வாய்ப்பு கிடைத்தது. லஜ்னா துணை சதராகவும், அமெரிக்காவின் லஜ்னா துணை சதராகவும் தொண்டாற்ற வாய்ப்பு கிடைத்தது. வாஷிங்டனின் லஜ்னா சதர் பொறுப்பையும் நிறைவேற்றினார்கள்.

மிகவும் அன்பு செலுத்தக்கூடிய, மற்றவர்களின் சுக துக்கங்களில் கலந்து கொள்ளக்கூடிய பெண்மணியாக இருந்தார்கள். மர்ஹூமா மூஸியாவாக இருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில், கணவர் மட்டுமின்றி நான்கு சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் உள்ளனர். சந்ததிகள் இல்லை. இவர்களின் ஒரு சகோதரர் அமெரிக்காவின் துணை சதர் ஆவார்கள். ஒருவர் அமெரிக்காவின் தாருல் கஸாவில் (ஜமாஅத்தின் நீதித்துறையில்) பணிபுரிகிறார்கள்.

அடுத்த குறிப்பு கனடாவைச் சேர்ந்த முஹம்மத் ஷரீஃப் சாஹிப் அவர்களின் துணைவியாரான சஃபிய்யா பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். இவர்கள் 80 வது வயதில் மார்ச் 11 அன்று வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیۡہِ رَاجِعُوۡنَ

இவர்கள் பெஷாவரின் முன்னாள் முரப்பி மதிப்பிற்குரிய மவ்லவி சிராக் தீன் சாஹிப் அவர்களின் மூத்த மகள் ஆவார்கள். வாஹ் குனியத்தில் நீண்ட காலம் லஜ்னா சதராக தொண்டாற்ற நல்வாய்ப்பு பெற்றார்கள். இவர்களின் கணவர் 1993 ஆம் ஆண்டு ஒரு விபத்தில் வஃபாத் ஆகிவிட்டார்கள். கணவர் இறந்த பிறகு பிள்ளைகளுக்கு நல்ல முறையில் தர்பிய்யத் கொடுத்தார்கள். தொழுகை மற்றும் நோன்பை முறையாக கடைபிடிக்கக்கூடிய, தஹஜ்ஜுத் தொழக்கூடிய, பொறுமைசாலியான மற்றும் நன்றி செலுத்தக்கூடிய பெண்மணியாக இருந்தார்கள். மக்களுடன் அதிகமாக பழகக் கூடியவராக இருந்தார்கள். நல்லுள்ளம் கொண்ட மற்றும் அனுதாபம் காட்டக்கூடிய பெண்மணியாக இருந்தார்கள்.

இவர்கள் வஸிய்யத்தும் கூட மூன்றில் ஒரு பங்கு (1/3) செய்திருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில், நான்கு மகள்கள் மற்றும் ஒரு மகன் இருக்கிறார்கள். இவர்களின் பிள்ளைகள் அனைவரும் ஏதாவதொரு வகையில் ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெறுகிறார்கள். அல்லாஹ் இந்த அனைத்து மர்ஹூம்களுக்கும் பாவமன்னிப்பு வழங்குவானாக. கருணையுடன் நடந்து கொள்வானாக. படித்தரத்தை உயர்த்துவானாக.

(தமிழாக்கம்: மவ்லவி அதாவுல் முக்னீ )

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad